**கிராமின் கிருஷி ம aus சம் சேவா**

இந்தியா வானிலை ஆய்வு துறை

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்

கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 02-08-2022**

**கடலூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2022-08-02 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2022-08-03 | 2022-08-04 | 2022-08-05 | 2022-08-06 | 2022-08-07 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 6.0 | 6.0 | 6.0 | 16.0 | 0.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 34.0 | 33.0 | 33.0 | 32.0 | 34.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 26.0 | 26.0 | 25.0 | 25.0 | 25.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 90 | 90 | 90 | 90 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 80 | 80 | 80 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 6.0 | 6.0 | 6.0 | 8.0 | 8.0 |
| காற்றின் திசை (கோணம்) | 180 | 190 | 190 | 200 | 200 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 4 | 4 | 5 | 5 | 4 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

வரும் வாரங்களில் இலேசான முதல் மிதமான மழை பெய்யவாய்ப்புள்ளது. அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் ஈரப்பதம் 90% ஆகவும், பகல் நேரங்களில் 70-80% ஆக இருக்க வாய்ப்பு உள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 32.0-34.0 °C ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 25.0-26.0 °C ஆகவும் இருக்கும். காற்றின் வேகமானது மணிக்கு 6-8 கி.மீ ஆக தெற்கு திசையில் வீசக்கூடும். வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

| |
|---|
| 08.08.2022 முதல்14.08.2022 வரை தமிழ்நாட்டில் மழை இயல்பை விட அதிகமாகவும், குறைந்த பட்ச வெப்பநிலை இயல்பாகவும் மற்றும் அதிக பட்ச வெப்பநிலை இயல்பை விட குறைவாகவும் இருக்கும். |

## குறுஞ்செய்தி :

| |
|---|
| வரும் வாரங்களில் இலேசான முதல் மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளதால் விவசாயிகள் பயிர்களுக்கு முறையான வடிகால் வசதி அமைக்கவும். |

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | 1. தற்பொழுது நிலவிவரும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் இலைச்சுருட்டுப்புழு மற்றும் தண்டுத்துளைப்பான் தாக்கம் காணப்படுவதால் அதை கட்டுப்படுத்த குளோரான்ட்ரானிலிப்ரோல் 18.5% 150 மிலி/எக்டர் அல்லது ஃபுளூபெண்டிமைடு 39.35 SC 50 கிராம்/எக்டர் என்ற அளவில் காலை அல்லது மாலை நேரத்தில் தெளிக்கவும். 2. தற்பொழுது நிலவிவரும் சூழ்நிலையில் நெல் நாற்றங்காலில் இலைப்பேன் தாக்கம் தென்பட்டால் அதை கட்டுப்படுத்த தயாமீதாக்ஷூம் 25% WG 100 கிராம்/எக்டர் அல்லது டைமீத்யோட் 1.5 மி.லி/லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். |
| கரும்பு | 1. கரும்பு பயிரில் மாவுப்பூச்சி மற்றும் பொக்கா போங்க் தாக்கம் காணப்படுகிறது. இதனால் பயிர்களின் வளர்ச்சி குன்றி மற்றும் குருத்து காய்ந்து காணப்படும். இதனை கட்டுப்படுத்த இமிடாக்ளோப்ரிட் 17.8 SL 0.6 மிலி/லி அல்லது கார்பென்டாசிம் 1.0 கி/லி என்ற அளவில் தெளிக்கலாம். 2. தற்பொழுது நிலவிவரும் சூழ்நிலையில் கரும்பில் இளங்குருத்து புழுவின் தாக்கம் தென்பட்டால் அதை கட்டுப்படுத்த குளோரான்டிரனிலிப்ரோல் 18.5 SC (0.5 மி.லி/ லிட்டர்) அல்லது பிப்ரோனில்5 % SC (2 மி.லி/ லிட்டர்) என்ற அளவில் தெளிக்கவும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| தென்னை | 1. பசை தடவிய மஞ்சள் நிறப்பாலித்தீன் தாள்களை மரத்தை சுற்றி கட்டி முதிர்ந்த ஈக்களை கவர்ந்து அழிக்கலாம். 2. வெள்ளை ஈக்கள் அதிகளவு பரவும் போது என்கார்ஸியா ஒட்டுண்ணிகள், காக்ஸிநெல்லிட் ஒட்டுண்ணிகள் / பொறிவண்டுகள் மற்றும் கிரைசோ பெர்லா இரைவிழுங்கிகள் ஆகிய நன்மை செய்யும் பூச்சிகள் தோப்புகளில் இயற்கையாகவே உருவாக ஆரம்பிக்கும். என்கார்ஸியா ஒட்டுண்ணிகள் அதிக அளவு உருவாகி வெள்ளை ஈக்களின் சேதத்தை 40 முதல் 70% அளவுக்கு குறைக்கின்றது. 3. அதிக பாதிப்பின்போது ஒரு லிட்டர் நீருக்கு வேப்பெண்ணெய் 20 மிலி அல்லது அசாடிராக்டின் 1.0% EC 2.0 மிலி/லிட்டர் தண்ணீரில் மருந்தை ஒரு லிட்டருக்கு 1.0 மி/லி ஒட்டும் திரவத்துடன் கலந்து தென்னை ஓலையின் அடிப்புறம் தெளிக்கவும். |

## பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை:

| பிற ( மண்/ நில தயாரிப்பு) | பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பொது ஆலோசனை | 1. காற்றின் வேகம் சில நேரங்களில் அதிகமாக இருக்க வாய்ப்புள்ளதால், எளிதில் முறியக்கூடிய முருங்கை மற்றும் வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும். 2. விவசாயிகள் முதிர்ச்சி அடைந்த பயிர்களை அறுவடை செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறது மற்றும் அறுவடை செய்த பயிர்களை கிடங்குகளில் அல்லது தார்பாய்கள் கொண்டு மூடி பத்திரபடுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. 3. இலேசான முதல் மிதமான மழை பெய்யவாய்ப்புள்ளதால் விவசாயிகள் பூச்சிக்கொல்லி, களைக்கொல்லி மற்றும் உரம் இடுதலை தவிர்க்கவும். |